# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்றப் புலமைப்பரிசிற் சபைச் சட்டம்

---

(2002, ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, ஒற்றோபர் மாதம் 04 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 9.25 தபாற் செலவு : ரூபா 4.50

# 2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்றப் புலமைப்பரிசிற் சபைச் சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ. 48/2002
4701

**இலங்கை அரசாங்கம், கற்கை, ஆராய்ச்சி என்பவற்றை வசதிப்படுத்துவதற்கு உதவியளிப்பதன்மூலம் கல்விசார் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கும் ; புலமைப்பரிசில்களை அளிப்பதனை நிருவகிப்பதற்குப் பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபையைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்றப் புலமைப்பரிசிற் சபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) பாராளுமன்றப் புலமைப்பரிசிற் சபை என அழைக்கப்படவேண்டிய குழுவொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும் ; இதற்குச் சட்டத்தின் நிருவாகமும், இச்சட்டத்தினால் சபைக்குச் குறித்தளிக்கப்படும் அல்லது அளிக்கப்படும் தத்துவங்களின், கடமைகளின், அத்துடன் பணிகளின் பிரயோகமும், புரிகையும், நிறைவேற்றுகையும் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும். பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபையைத் தாபித்தல்.

3. (1) சட்டத்தின் குறிக்கோள்கள், கற்கைகள், ஆராய்ச்சி போதனைகள், மற்றும் வேறு கல்விசார் செயற்பாடுகள் என்பவற்றுக்கு நிதியளிப்பதனால், உயர்கல்வியிலான பரிமாற்றங்களுக்காக ஏற்பாடு செய்வதன்மூலமும் பின்வருவோருக்குப் பட்டப்பின் புலமைப்பரிசில்களை அளிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதன்மூலமும் கல்விசார் முன்னேற்றத்துக்கான சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துதலாகும் :— சட்டத்தின் குறிக்கோள்கள்.

(அ) வெளிநாட்டிலுள்ள உயர்கல்வி நிறுவகங்களுக்குச் செல்வதற்கு, இலங்கையில் உயர்கல்வியைப் பின்பற்றும் இலங்கைப் பிரசைகளுக்கும் ; அத்துடன்

(ஆ) இலங்கையிலுள்ள உயர்கல்வி நிறுவகமொன்றில் உயர்கல்வியைப் பின்பற்றுவதற்கு, வெளிநாட்டுப் பிரசைகளுக்கும்,

(2) ஓராம் உட்பிரிவில் தரப்பட்டுள்ளவாறு சட்டத்தின் குறிக்கோள்கள் சபையினால் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

கற்கைத் துறைகளைத் தீர்மானிக்கும் முறை.

**4.** (1) எந்தக் கற்கைத்துறைகள் தொடர்பில் பட்டப்பின் அளிப்புகள் செய்யப்படலாமோ அந்தக் கற்கைத்துறைகள் பிரதம அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதலும் பாராளுமன்றத் தீர்மானமொன்றின்மூலம் அளிக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய தீர்மானம் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கிணங்கப் பிரேரிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரதம அமைச்சரானவர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், சபையின் தவிசாளர் ஆகியோருடன் கலந்தாலோசித்த பின்னர், ஆண்டுதோறும் அளிக்கப்படவேண்டிய புலமைப் பரிசில்களின் எண்ணிக்கையையும், அத்தகைய மானியக் கொடைகளுக்குத் தேவையான நிதியளிப்பின் மதிப்பீடொன்றையும் தீர்மானித்தல் வேண்டும் ; இது, (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய தீர்மானத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

சபையின் அமைப்பு முதலியன.

**5.** (1) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அரசியலமைப்புப் பேரவையினது விதப்புரையின்மேல் சபாநாயகரினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள் ; இவற்றுள் ஒருவர் பெண்ணாக விருத்தல் வேண்டும் ;

(ஆ) துணைவேந்தர்களினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர் ; அத்துடன்

(இ) உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்

(2) பந்தி (அ) வின்கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர்களுள் ஒருவர், பிரதம மந்தியால் சபையின் தவிசாளராகப் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) சபைக்குச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும் ; அவரே சபையின் பிரதான நிருவாக அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், சபையின் எல்லா முடிபுகளினதும் செயற்படுத்துகைக்கும் சபையினால் அவருக்குக் கையளிக்கப்படும் அல்லது இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்படும் அல்லது குறித்தளிக்கப்படும் ஏதேனும் தத்துவத்தின் அல்லது பணியின் பிரயோகத்துக்கும் நிறைவேற்றுகைக்கும் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவின் (அ), (ஆ) என்னும் பந்திகளின்கீழ் நியமிக்கப்படும் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் பதவிக்காலம், அவர்களின் நியமனத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் மூன்றாண்டுகளாதல் வேண்டும்.

(5) சபாநாயகர், மேலே குறித்துரைக்கப்பட்ட பதவிக்காலங்கள் முடிவுறுமுன்னர், குறிக்கப்படும் காரணங்களுக்காக, இச்சபையின் தவிசாளரை அல்லது எவரேனும் உறுப்பினரை, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது பதவியிலிருந்து அகற்றலாம்.

(6) விடயத்துக்கேற்ப, தவிசாளர் அல்லது உறுப்பினரொருவர், அவர் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலொழிய, தவிசாளராக அல்லது உறுப்பினராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(7) நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதியமும் படிகளும் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(8) சபையானது, அதன் அமைப்பில் ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன், அதற்கிணங்க, சபையின் செயல் அல்லது முடிபு எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலுமாகாது.

(9) சபையின் அலுவல்களை நடாத்துவதிலும் சபையின் கூட்டங்களை நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையானது, விதித்துரைக்கப்படுகின்றவாறானதாதல் வேண்டும்.

சபையின் தத்துவங்கள்.

6. சபையானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தினால் அதற்கு அளிக்கப்படும் அல்லது குறித்தளிக்கப்படும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ;

(ஆ) இலங்கையினுள் உள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது பட்டமளிக்கும் நிறுவகத்திலிருந்து தமது முதலாவது பட்டத்தைப் பெற்ற இலங்கைப் பிரசைகளுக்குப் பட்டப்பின் புலமைப்பரிசில்களை அளிப்பதற்கும் ;

(இ) வெளிநாட்டிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது பட்டமளிக்கும் நிறுவகத்திலிருந்து தமது முதலாவது பட்டத்தைப் பெற்ற வெளிநாட்டுப் பிரசைகளுக்குப் பட்டப்பின் புலமைப்பரிசில்களை அளிப்பதற்கும் ;

(ஈ) சட்டத்தின்கீழ் எவ்வாட்களுக்கு அளிப்புகள் வழங்கப்பட்டுள்ளனவோ அவ்வாட்களுக்குத் தெளிவுநிலைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களையும், மொழிப்பயிற்சி நெறிகளையும் நடாத்துவதற்கும் ;

(உ) உள்நாட்டவராகவுள்ள அல்லது வெளிநாட்டவராகவுள்ள, அளிப்புகளைப் பெற்றவர்களின் வதிவிடத்திலிருந்து பிரயாணஞ்செய்வதனை வசதிப்படுத்துவதற்கான செலவுகள் உட்பட அத்தகைய ஆட்களுக்குச் சபையின் நிதியத்திலிருந்து ஏனைய சேவைகளையும் வழங்குவதற்கும் ;

(ஊ) அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் பயனுறு தன்மையை அதிகரிப்பதற்கென ஒவ்வோர் அளிப்பையும் காலத்துக்குக்காலம் மதிப்பீடுசெய்வதற்கும் ; அத்துடன்

(ஏ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமாக விருக்கக்கூடியவாறான அல்லது இடைநேர்விளைவாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்வதற்கும்.

ஒப்பந்தங்களின் மூலம் அல்லது உடன் படிக்கைகளின் மூலம் மானியக் கொடைகள் அளிக்கப்படுதல்.

7. (1) சபையினால் பட்டப்பின் புலமைப்பரிசில்களின் அளிப்பு ஒரு மானியக்கொடை என்றவகையாகவிருத்தல் வேண்டும். அத்தகைய மானியக்கொடையின் நியதி நிபந்தனைகள், சபைக்கும் அத்தகைய அளிப்பைப் பெறுகின்றவருக்கும் இடையே செய்துகொள்ளப்படும் ஓர் ஒப்பந்தத்தில் அல்லது ஓர் உடன்படிக்கையில் அடங்கியிருத்தல் வேண்டும். அத்தகைய ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவேண்டிய கருமங்கள் விதித்துரைக்கப்பட்டவாறாக விருத்தல் வேண்டும்.

(2) புலமைப்பரிசில்களை அளிப்பதில் சபையினாற் பின்பற்றப்படவேண்டிய கட்டளைக்கற்கள், பிரதம அமைச்சர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் என்போருடன் கலந்தாலோசித்துத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்படும் மானியக்கொடையொன்று, நிதியமைச்சரின் கலந்தாலோசனையுடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, தனிப்பட்ட போதனைக் கட்டணங்கள், பிரயாணச் செலவு, இடவசதிக்கான இறுப்பனவுகள், நாளாந்த உணவுவீதங்கள், ஏதேனும் அவசர மருத்துவச் செலவுகளுக்கான ஆகுசெலவு உட்பட சுகாதார, விபத்துக் காப்புறுதி என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(4) அளிப்பொன்றைப் பெற்றவர் கற்கைநெறியைப் பின்பற்றும்போது இறந்தால், அத்தகைய ஆளின் பூதவுடலை அவரது வதிவிடத்துக்குக் கொண்டுசெல்வதற்கு அவசியமான செலவுகள் சபையினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

(5) சபையானது, அளிப்பொன்றைப் பெற்றவரினாற் செய்யப்படும் வேறெவையேனும் எதிர்பாராச் செலவுகளுக்கான வேண்டுகோள்களையும் அத்தகைய வேண்டுகோளுக்கு ஆதாரமாகத் திருப்திகரமான எண்பிப்பு சபைக்குக் காண்பிக்கப்படுவதன்மேல் அங்கீகரிக்கலாம்.

சபையின் நிதியம்.

**8.** சபையின் நிதியமொன்றிருத்தல் வேண்டும். அதிலிருந்து புலமைப்பரிசில்களின் அளிப்புச் சம்பந்தமான எல்லாச் செலவழிப்புகளும் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பின்வருவன அதனுட் செலுத்தப்படுதலும் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படும் எல்லாப் பணங்களும்;

(ஆ) சபையினாற் பெறப்படும் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நன்கொடைகள், மானியக் கொடைகள் என்பன எல்லாம் ;

(இ) பணவகையிலான வேறெல்லாக் கொடைகளும்.

சபையின் அறிக்கை.

**9.** சபையானது, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டுக்கும் அத்தகைய ஆண்டுக்கு அளிக்கப்படும் புலமைப்பரிசில்கள், அதற்காகப் பயன்படுத்தப்படும் நிதிகள் என்ப பற்றிய கூற்றைக் கொண்டுள்ள சபையின் செயற்பாடுகளினது அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்தின்முன்னர் இடுவித்தல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**10.** (1) இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுப்பதற்காகவும் விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் ஏதேனும் கருமத்துக்காகவும் பிரதம அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :—

(அ) சபையின் அலுவல்களை நடாத்துவதிலும் சபைக் கூட்டங்களிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(ஆ) ஒரு புலமைப்பரிசிலை அளிப்பது தொடர்பான ஏதேனும் ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் அடக்கப்படவேண்டிய கருமங்கள்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று, அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப் படுதல் வேண்டும்.

**11.** இச்சட்டத்தில் — பொருள் கோடல்.

"அரசியலமைப்புப் பேரவை" என்பது அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவை என்று பொருளாகும்.

**12.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.